# சென்னை வானவில் சுயமரியாதை பேரணி 2026

“தமிழ்நாட்டில் உள்ள மாற்றுப் பாலின மற்றும் மாற்றுப் பாலீர்ப்பு சமூக மக்கள் (LGBTQIA+) பாகுபாடின்றி வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் உள்ளடக்குவதற்கு நம் ஆதரவை தெரிவிப்போம்!”

வானவில் சுயமரியாதை பேரணி, 2026 ஜூன் 28, ஞாயிற்றுக்கிழமை, மாலை 3:30 மணிக்கு சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் முன்பில் இருந்து தொடங்குகிறது.

2026ஆம் ஆண்டின் சென்னை வானவில் சுயமரியாதை பேரணி 18வது முறையாக நமது சென்னையில் கொண்டாடப்படுகிறது. இந்த ஜூன் மாதம் முழுவதும் மாற்றுப் பாலின மற்றும் மாற்றுப் பாலீர்ப்பு (LGBTQIA+) சமூகத்தினர் ஆகிய நாங்கள் யார் என்பதாலோ; யாரை நேசிக்கிறோம் என்பதாலோ; நமது உரிமைகளை மறுக்கும் சமூக நெறிகளை மாற்றுவதற்கான நமது உறுதிப்பாட்டைப் மீண்டும் புதுப்பிக்கிறோம். இருமைப் பாலினங்கள், ஆணாதிக்கம் மற்றும் எதிர்பாலீர்ப்பிய பாகுபாடு என்னும் நெறிகளில் வேரூன்றிய இந்த ஒடுக்குமுறை நமது வீடுகளில் தொடங்கி, கல்வி, சுகாதார அமைப்புகள், வேலைவாய்ப்பு மற்றும் பொது நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் தொடர்கிறது. வானவில் சுயமரியாதை மாதம் என்பது மாற்றுப் பாலின மற்றும் மாற்றுப் பாலீர்ப்பு (LGBTQIA+) சமூகத்தினராகிய எங்களின் இருப்பு, கண்ணியம் மற்றும் சுயமரியாதையை பொதுச் சமூக நீரோட்டத்தில் நிலைநாட்டுவதற்கும், முழுமையான குடிமக்களாக வாழ்வதற்கான உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் ஒரு வழியாகும்.

தமிழ்நாட்டில் உள்ள மாற்றுப் பாலின மற்றும் மாற்றுப் பாலீர்ப்பு (LGBTQIA+) சமூகத்தினராகிய நாங்கள் மற்றும் எங்களுடன் தோளோடு தோள் கொடுத்து நிற்கும் ஆதரவாளர்கள், நமது புதிய தமிழக அரசை வரவேற்கிறோம். மேலும், பின்வரும் வழிகளில் எங்கள் உரிமைகளைப் பாதுகாக்க அவர்கள் உறுதியளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசுக்கு பின்வரும் கோரிக்கைகளை இப்பேரணி மூலமாக முன்வைத்து, செயல்படுத்தக் கோருகிறோம்:

1. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் 'சுஷ்மா எதிர் காவல் ஆணையர்' (Sushma and Anr. versus Commissioner of Police and Ors.) என்னும் வழக்கில்

(2021ஆம் ஆண்டில் இருந்து செயற்கட்டளை ஆணையாக), அனைத்து மாற்றுப் பாலின மற்றும் மாற்றுப் பாலீர்ப்பு சமூக மக்கள் (LGBTQIA+) குறித்து, ஒரு விரிவான மாநிலக் கொள்கையை உருவாக்குமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. இருப்பினும், திருநருக்கான கொள்கை மட்டுமே உருவாக்கப்பட்டது. இந்த ஒருங்கிணைந்த LGBTQIA+ கொள்கையை இறுதி செய்து, வெளியிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அதன் வரைவுப் பதிப்பு மார்ச் 2024-இல் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2. திருநங்கைகள், திருநம்பிகள் மற்றும் இடைப்பாலினத்தவர் (intersex) ஆகியோருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் (தனியார் மற்றும் பொதுத்துறையில்) கிடைமட்ட இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.

3. திருநர் உரிமைகள் பாதுகாப்பு திருத்தச் சட்டம் (2026) மூலம் தீங்கு விளைவிக்கும் அம்சங்களை நீக்கும் வகையில் மாநில விதிகளைத் தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என்று கோருகிறோம். எடுத்துக்காட்டாக: பாலினப் பொருத்தமின்மை (gender incongruence) அல்லது பாலின அதிருப்தி (gender dysphoria) போன்றவற்றை அந்த சட்டம் ஊடுருவும் உடல் பரிசோதனைகள் (invasive physical examinations) கொண்டு உறுதி செய்யவேண்டும் என்கிறது. இவ்வித பரிசோதனை ஏதுமின்றி ஒரு மனநல நிபுணரால் ஆவணப்படுத்தப்படுவதற்கு மட்டுமே மருத்துவ வாரியச் சரிபார்ப்பு (Medical Board Verification) இருக்கவேண்டும். மேலும், மருத்துவ நிபுணர்கள் வழங்கிடும் முறையான பாலினத்தை-உறுதிப்படுத்தும் பராமரிப்பு ஒரு குற்றமல்ல என்பதை தெளிவாக உறுதிசெய்ய வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

4. திருநங்கைகள் நல வாரியத்தின் தமிழ்ப் பெயரைத் திருநர் நலவாரியம் என மாற்ற வேண்டும்; ஏனெனில் தற்போதைய பெயரான "திருநங்கை" என்பது திருநங்கை பெண்களை மட்டுமே குறிக்கிறது, திருநம்பி ஆண்களை  உள்ளடக்கியதாக இல்லை.

5. தற்போது திருநங்கைகள் நலவாரியத்தில் ஒரே ஒரு திருநம்பியும், ஒரே ஒரு இடைப்பாலினத்தவரும் மட்டுமே உள்ளனர். மிகவும் ஒடுக்கப்பட்ட இந்தச் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவர உதவும் வகையில், திருநங்கைகள் நலவாரியத்தில் திருநம்பிகள் மற்றும் இடைபாலினத்தவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கக் கோருகிறோம்.

6. தமிழ்நாடு அரசால் திருநங்கைகளுக்காக வழங்கப்படும் சமூக நலத் திட்டங்கள், திருநம்பிகள் மற்றும் இடைப்பாலினத்தவர்களுக்கும் கிடைக்கச் செய்யப்பட வேண்டும் எனக் கோருகிறோம். மேலும், 'திருநங்கை' என்பது அனைத்துத் திருநர்-இடைப்பாலினத்தவர்களை உள்ளடக்கிய ஒரு சொல் அல்ல என்றும், அது திருநங்கைகளையும் மற்ற பெண்மைத் தன்மை கொண்ட திருநர் மக்களையும் மட்டுமே குறிக்கிறது என்றும் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு நினைவூட்டுகிறோம்.

7. தன் பாலின உறவுகளை அங்கீகரிக்கும் 'குடும்ப இணைப்புப் பத்திரம்' அல்லது அதற்கு இணையான வழிமுறைகளை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

8. தொடர்புடைய சட்டங்களில் திருத்தங்கள் செய்து, LGBTQIA+ சமூகத்தினருக்கு, தத்தெடுப்பு மற்றும் பதிலித்தாய் முறை குழந்தை பெறுதல் உரிமைகளை (adoption and surrogacy rights) வழங்கக் கோருகிறோம்.

9. தமிழ்நாட்டில் உள்ள திருநர் மக்களுக்கான சிகிச்சை மையங்கள், திருநர் மக்களின் கண்ணியத்தையும் சுய முடிவெடுக்கும் உரிமையையும் மதிக்கும் வாடிக்கையாளரை-மையமாகக்-கொண்ட தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும், சுய-உறுதிப்படுத்தப்பட்ட பாலினத்தை உளவியல் ரீதியாக நிர்ணயிப்பதன் ஒரு பகுதியாக பிறப்புறுப்புப் பரிசோதனையைக் கோராமலும், பாலினத்தை உறுதிப்படுத்தும் சிகிச்சைக்காக பெரும்பான்மை வயதடைந்த திருநம்பிகளிடம் பெற்றோரின் சம்மதத்தைப் பெறக் கேட்காமலும் இருக்க வேண்டும். இந்த சிகிச்சை மையங்களில் யோனிவழி கூடுகள் (per-vaginum nests) போன்ற நெறிமுறையற்ற மற்றும் அறிவியலுக்குப் புறம்பான நடைமுறைகள் தொடர்கின்றன, அவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

10. பின்வரும் மத்திய அரசின் அறிவுரைகளைத் தமிழ்நாடு செயல்படுத்தும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்:

    a. ரேஷன் அட்டை வழங்கும் நோக்கங்களுக்காக, தன்பாலீர்ப்புறவில் உள்ள துணைவர்களை ஒரே குடும்பத்தின் பகுதியாகக் கருத வழிவகை செய்தல் வேண்டும். மேலும், ரேஷன் அட்டை வழங்குவதில் தன்பாலீர்ப்புறவில் உள்ள துணைவர்கள் எந்தவித பாகுபாட்டிற்கும் உள்ளாகாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

    b. தன்பாலீர்ப்பாளர்கள் ஒரு கூட்டு வங்கிக் கணக்கைத் திறக்கவும், தன்பாலீர்ப்புறவில் உள்ள துணைவரை பரிந்துரைக்கப்பட்டவராக/வாரிசுதாரராக நியமிக்கவும் அனுமதிக்கப்படவேண்டும்.

11. 'சுஷ்மா எதிர் காவல் ஆணையர்' (Sushma and Anr. versus Commissioner of Police and Ors.) வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவுகளில் அறிவுறுத்தப்பட்டபடி, LGBTIQA+ மற்றும் பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாத (gender non-conforming) குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கல்வி நிறுவனங்களின் கற்பித்தல் மற்றும் கற்பித்தல் அல்லாத ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளியின் பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டங்களைப் பயன்படுத்தவேண்டும். சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட அறிக்கைகளில் இணையவழிப் பயிற்சி மூலம் 1,00,000

பேருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக கூறியிருந்தாலும், உண்மையில் அத்தகைய விழிப்புணர்வுப் பிரச்சாரம் நடைபெறவில்லை.

12. தற்கொலை முயற்சிகள் மற்றும் தற்கொலைகள் உட்பட பல மனநல பிரச்சனைகளை LGBTIQA+ மக்கள் எதிர்கொள்கிறார்கள். தமிழ்நாடு மாநில மனநல ஆணையத்தால் உருவாக்கப்பட்ட LGBTIQA+ உள்ளடக்கிய மனநலக் கொள்கை இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த கொள்கையை நடைமுறைப்படுத்தி தீர்வை நோக்கி தமிழ்நாடு செல்ல வேண்டும்.

13. மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பால்சார்-பாலினம்சார்-பாலியல்புசார் பதங்கள் கொண்ட சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்தி, LGBTIQA+ பிரச்சினைகள் குறித்து ஊடகங்களில் உணர்வுப்பூர்வமான செய்திகள் வெளிவர நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், சமூக ஊடகங்களில் வெறுப்புப் பேச்சு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், புகார்களின் அடிப்படையில் காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

14. LGBTIQA+ மக்களை அரவணைக்கும் விதமாக பணியிடக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உறுதி செய்வதிலும், பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) செயல்பாடுகள் மூலம் LGBTIQA+ சமூக முன்னெடுப்புகளை ஆதரிப்பதிலும் தனியார் துறையின் ஆதரவை நாங்கள் கோருகிறோம்.

15. பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் உள்ள கழிவறைகள், தங்கும் விடுதிகள் மற்றும் பிற வசதிகளில், இன்றளவில் இருக்கும் ஆண் அல்லது பெண் என்னும் விருப்பத்தேர்வுக்கும் மேலாக, பாலினப் பாகுபாடற்ற விருப்பத்தேர்வும் (gender-neutral) சேர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். மக்கள் தங்கள் பாலின அடையாளங்களுடன் சிறப்பாகப் பொருந்தக்கூடிய வசதிகளைப் பயன்படுத்தும் சுதந்திரம் இருக்க வேண்டும்.

16. மாதவிடாய் சுகாதாரம் மற்றும் தூய்மையை மையமாகக் கொண்ட பொது சுகாதாரம் மற்றும் துப்புரவுத் திட்டங்களின் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் களப்பணிகளில் மாதவிடாய் அனுபவிக்கும் திருநம்பிகள் மற்றும் பாலின ஈர்மறைக்கு அப்பாற்பட்ட நபர்களை (gender non-binary) அங்கீகரித்து உள்ளடக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

17. சட்டம், உளவியல், சமூகப் பணி, செவிலியப் பணி மற்றும் அனைத்து துறைகளின் பாடத்திட்டங்களில் LGBTIQA+ உள்ளடக்கிய பாடங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

18. பஞ்சாயத்து (கிராம ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி) தொடங்கி சட்டமன்றம், நாடாளுமன்றம் வரை LGBTIQA+ சமூக மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். அந்தப் பிரதிநிதித்துவம் என்பது குறிப்பிட்ட இட ஒதுக்கீடாகவோ அல்லது

நியமன உறுப்பினர் பதவி இடங்களாகவோ கொண்டு வர மத்திய மற்றும் மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும.

19. மத்திய அரசு பணியிடங்களிலும் (UPSC, SSC, RRB, Armed Forces உள்பட), கல்வி நிறுவனங்களிலும் திருநங்கை திருநம்பி மற்றும் ஊடுபாலினத்தவருக்கு கிடைமட்ட இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசு நடவடிக்கை வேண்டும்.

20. தமிழக அரசின் பல்வேறு துறைகளில் திருநம்பிகளும் திருநங்கைகளும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்தப் பணியிடங்கள் முறைப்படுத்தப்பட்டு நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

21. நாடு முழுவதும் மற்றும் உலகளவில் பாலினம், பாலீர்ப்பு, வர்க்கம், சாதி, மாற்றுத்திறன், இனம், மதம் மற்றும் பிற காரணிகளின் அடிப்படையில் நிகழும் சமூக அநீதிகளை முடிவுக்குக் கொண்டுவரப் போராடுபவர்களுக்கு நாங்கள் எங்கள் ஆதரவைத் தெரிவிக்கிறோம்.

நாங்கள் யார்: தமிழ்நாடு வானவில் கூட்டணி என்பது LGBTIQA+ நபர்கள் மற்றும் ஆதரவாளர்களின் முறையான மற்றும் முறைசாரா குழுக்களின் ஒரு கூட்டமைப்பாகும். இது ஆண்டுதோறும் சென்னை வானவில் சுயமரியாதை பேரணி மற்றும் அது தொடர்பான நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறது.

தொடர்புக்கு: ஜெயா: +91 98418 65423, ஷரண்: +91 79041 24919